பஞ்ச பாவையர் பரிணயம்

ஆசிரியர்

A. அப்பன் ஐயங்கார்

OFFICE OF THE REGISTRAR
No.
8 - MAR 1927
MADRAS

தூத்துக்குடி

எஸ். ஏ. வி. ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

E. K. நடேச சர்மா அவர்கள்

எழுதிய நான்முகத்துடன்

கூடியது.

திருநெல்வேலி ஜங்ஷன் புஸ்தக வியாபாரம்

S. R. சுப்பிரமணிய பிள்ளையால்

பிரசுரிக்கப்பட்டது.

1927

காப்பிரைட்]

[விலை அணா **6**

224012
600 008

PRINTED
AT THE B. N. PRESS, MOUNT ROAD,
MADRAS.
1927.

நூன்முகம்.

மொழி வளர்ச்சிக்குச் செய்யுள் நூல்கள் மாத்திரமல்ல, வசன நூல்களும் இன்றியமையாதன. வசன நூல்களென வெளிவந்துலவும் கொச்சைத்தமிழ்ச்சொற்களாணியன்ற குழறுபடைகளான் வருங்குறையும், தமிழ் மணங்கமழும் இனிய நடையினியன்ற நூல்களான் வரும்பயனும் மிகப்பெரியன. பள்ளிச் சிறார்கள் கட்டுரை எழுதுவதில் வல்லராக இந்நூற்கள் அவருக்குப் பெரிதுந் துணை புரியும். தமிழென்றால் வேம்பெனப் போற்றிய புதுக்கலைவல்லாரெல்லாம் கரும்பென விந்நாளில் கரைகின்றனர்; விரும்பிப் படிக்கின்றனர். இதுவும் மொழிவளர்ச்சிக்கு ஓர் நன்னிமித்தம் போலும்!

மற்று, இச்சிறு நூல் இனிய செந்தமிழ் நடையில் இயன்றுளது. சிறுவர்க்கும் சிறுமிகளுக்கும் பெருமகிழ்வு தந்து, நல்லறிவு கொளுத்து முறையிலமைந்தது. இதிற் சில பகுதிகள் இல்லறத்தை இனி தெடுத்தியம்பும்; வேறு சில நல்லொழுக்க நெறிகாட்டும்; மற்றுஞ் சில வீரஞ்செப்பும்; இன்னுஞ் சில அன்பை விரிக்கும். இந்நூல் இயற்சொற்கள் மருவியது; திரிசொற்கள் ஒருவியது. இத்தகைய வசன நூல்கள் கணக்கிலவாகப் பெருகி வரவேண்டுமென்பதே எம்விருப்பு. சந்திகளான் வரும் மருட்கையும் இந்நூலில் காண்பதரிது. குணங்கள் பலவெனப் பன்னிப் பன்னிக் கூறுவதினும், நல்லனவற்றுக்கு அவை தாமே வெளியாமென்று கொண்டு இத்துடன் நிறுத்துகிறேன்.

வாரம் பற்றியாவது கோபம் பற்றியாவது ஒன்றைச் சீர்தூக்கிப்பாராது, பொருள் விளைந்த நிலம் எதுவென எண்ணியெண்ணித் திகைக்காது, நல்லனவற்றையே சீராட்டிப் பாராட்டும் தமிழுலகம் இந்நூலை மாணவ வுலகத்துக்குப் பெரிதும் பயன்படும்படி தோன்றாத்துணை செய்யுமென எண்ணுகின்றேன்.

இங்ஙனம்,

E. K. Natesa Sarma, Vidwan,
(Under 7(b) Oriental Titles, Madras University)
Senior Tamil Pandit, S.A.V. High School,
TUTICORIN.

விஷயம்.

			பக்கம்.
1.	பார்வதி பரிணயம்	...	1
2.	தெய்வயானை பரிணயம்	...	13
3.	மீனாட்சி திருமணம்	...	21
4.	உஷா பரிணயம்	...	32
5.	சந்திரமதி பரிணயம்	...	45
6.	அரும்பத விளக்கம்	...	57

பார்வதி பரிணயம்

பார்வதி பரிணயம்.

மூன்று பக்கங்களில் கடலாற் சூழப்பட்ட இப் பரதகண்டத்திற்கு வட எல்லையாக விளங்குவது இமயமலை. அதற்கு இறைவன் இமவான் என் போன். அவன் வெகு காலமாக மக்கட்பேறின்றி வருத்தமுற்றான். முடிவில் அவன் சிவபெருமானைத் தியானித்துத் தவம் இயற்றினன். இன்னணம் அநேக வருடகாலம் தவம் கிடந்தும், அவன் புத்திர பாக்கியத்தைப் பெறுமல் இருந்தனன். ஆயினும் இமவான் மனத் தளர்வடையாமல் தவம் புரிவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனன்.

அப்போது திருக்கயிலையங்கிரியில் உமாதேவி பரமசிவனைப் பணிந்து, "சுவாமி, தேவரீரை இகழ்ந்த அக்கொடிய தக்கன் மகளாக விளங்க என் மனம் விரும்ப வில்லை; மேலும் அத்தீயவன் அளித்த தாக்ஷாயணி எனும் பெயரையும் நீக்கிக் கொள்ள விரும்புகிறேன்; அங்ஙனஞ் செய்வதற்கு ஓர் உபாயம் அருள வேண்டுகிறேன்," என்று பிரார்த்தித்தனள். அதற்கு விழிநுதற் கடவுள், "கௌரீ, இமாசல இறைவனை இமவான் புத்திர பாக்கியம் பெறுமல் எம்மைத் தியானித்துத்

தவம் இயற்றி வருகின்றனன்; நீ யவனுக்கு மக ளாகத் தோன்றிச் சிலகாலம் அவன்பால் வளர்ந்து வருக; பின்பு யாம் அவண்வந்து நின்னை மணக் கிரேம்," என்று கூறியருளினர்.

உடனே தாக்ஷாயணியாகத் தயங்குஞ் சங்கரி தேவி இமவரை நண்ணி, அங்குள்ள ஒரு தடா கத்தில் ஒரு தாமரை மலர்மீது பெண்குழந்தை உரு அமைந்து திகழ்ந்தனள். ஆங்குத் தவம் இயற் றிக்கொண்டிருந்த இமவான் அச்சேயைக் கண் ணுற்றனன்; பிள்ளைக் கலிதீர்வுற்றதை நினைத்துப் பேரானந்த முற்றனன்; அதனை எடுத்தனன். தனது மாளிகை ஏகி மனைவி கையில் நல்கினன். இறைவி அக்குழந்தையை அன்போடு வாங்கி, உச்சிமோந்து, வெகு செல்வமாக வளர்த்து வந் தனள்.

ஒரு நன்னாளில் அப்பாவை பார்வதி எனும் பேர்கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஐந்தாம் பிராயம் அடைந்தாள்.

ஒருநாள் பார்வதி இமவானைப் பார்த்து, "எந்தாய், யான் அரனையே மணமுடித்துக் கொள்ள நிச்சயித்துள்ளேன்; ஆகவே அவர் அருள் எனக்குக் கிடைக்க, யான் அவரைத் தியானித்துத் தவம் இயற்ற வேண்டும்; அங்ஙனம் புரிவதற்கு ஒரு விடுதி அமைத்துந் தருக," என வேண்

டினள். அதற்கு வள்ளல், "குழந்தாய், உனது பக்திக்கு மெச்சினேன்; ஆயினும் நீ இச் சிறு வயதில் தவம் புரிய எண்ணுவது தகாது; அங்ஙனஞ் செய்தால் நின் மேனி வாடிப்போகும்; ஆதலால் நீ கொண்ட எண்ணம் தவிர்க," என்று கூறினன்.

அதுகேட்ட பார்வதி தன் கருத்து மாறுபடாமல் ஒரே பிடிவாதமாக மீண்டும் இமவானைப் பணிந்து, "தந்தாய், எவ்வுயிரையுங் காத்து வரும் ஈசன் என்னையும் பாதுகாப்பன்; தவம் புரிந்தால் என் மேனி இளைத்துவிடும் என்பதைக் குறித்து நீர் கவலை கொள்ளவேண்டா," என்று மொழிந்தாள். முடிவில் இமவான் அவள் வேண்டுகோளுக்கு இசைந்தனன்.

பின்பு அவன் ஓர் அழகிய தவச்சாலை வெகு சீக்கிரத்தில் கட்டி முடித்திடுமாறு சில பணியாளருக்கு உத்திரவிட்டனன். மாடங்கட்டி முடிவு பெற்றவுடன் மங்கை பார்வதி தனது தோழிமாருடன் அவண் சென்றனள். ஆங்கு அவள் மிகுந்த பக்தியுடன் சிவபெருமானைத் தியானித்துத் தவம் இயற்றி வந்தனள்.

அப்போது மகேந்திரபுரியில் சூரபதுமன் எனும் பேர்கொண்ட ஓர் அசுரன் இருந்தான். அவன் தவ வலிமையால் பல பட்டணங்களைத் தன் வசப்படுத்திக் கொண்டான்; வனத்தில்

வசித்து வந்த முனிவர் தவத்தைக் கெடுத்தான். மற்றும் அவன் தேவலோகஞ் சென்று இந்திரன், வாயு, வருணன், எமன் முதலான தேவர்களுடைய நகரைக் கொள்ளை யடித்தான்; அவர்களைத் தம் நகரினின்றும் விரட்டி யடித்தான்; அநேக தேவர்களைச் சிறைசெய்து தனக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறும் ஆக்ஞாபித்தான்.

அவ்வேளையில் வானவர்கோன் பூதலம் போந்து தேவர் துயரம் தீரவேண்டிச் சிவபெருமானைக் குறித்துத் தவம் இயற்றி வந்தனன். அவன் இயற்றிய அருந்தவத்தை மெச்சிய சிவபிரான், அவன் முன்பு தோன்றி, "அமரேச, நீ வேண்டுவது யாது?" என்று யாதும் அறியாதவரைப் போல வினவியருளினர். அதற்கு இந்திரன் மனமகிழ்ந்து, "சுவாமி, சூரபதுமனுதியரால் யாம் படுந்துயரைத் தேவரீர் அறியீரோ? அவனை வதைத்து எம்மைக் காத்தருள வேண்டும்," என்று வேண்டிக் கொண்டனன்.

அதுகேட்ட அண்ணல் வாசவனை நோக்கி, "தேவேந்திர, நீ அஞ்சவேண்டாம்; யாம் ஒரு புத்திரனை யளித்து நும் துயர் தீர்ப்போம்," என்று கூறித் திருவுருக்கரந்தருளினர்.

செஞ்சடை முடித்தேவன் மறைந்ததும் அமரர்கோன் பிரம தேவனை நண்ணிச் சிவபெருமான் அருளியதைக் கூறினன். அதனைச் செவியுற்ற

அயன், தேவர் குழாத்துடன் வைகுண்டம் சென்று திருமாலை வணங்கி, "ஆதியே, சிவபெருமான் இந்திரன் முன்பு தோன்றித் தாம் ஒரு சுதனை நல்கி அசுரரை அழித்திடுவதாக அருளினர்; ஆனால் அவர் சீக்கிரத்தில் அங்ஙனஞ் செய்யாமல் யோக நிட்டையில் அமர்ந்திருக்கின்றனர்; யாங்களோ அவுணர் இழைக்கும் பலவிதத் துன்பங்களுக்குள்ளாகி உழலுகின்றோம்," எனப் புகன்றனன்.

அதுகேட்ட மாதவன், "சுரர்காள், சிவபெருமான் முனிவர்கட்காக யோகத்திலிருக்கின்றனர்; அதனைத் தவிர்த்து இமவான் புத்திரியை மணந்து ஒரு புத்திரனை யளிக்க ஒரு சூழ்ச்சி சொல்லுகிறேன்; நீங்கள் மன்மதனை யவர்பால் அனுப்பினால், அவர் காமவேட்கை மிகுந்து அம்பிகையை மணக்கச் செல்வர்; அங்ஙனஞ் செய்திடுக," என்று கூறி அவர்களை யனுப்பியருளினன்.

அவ்வாறே பிரமதேவன் ஐங்கணைக் கிழவனைச் சிவபெருமான் பால் அனுப்பினன். அவன் சென்று எம்பெருமான் மீது தனது மலரம்புகளைப் பிரயோகித்தான். அதனால் சிவபிரான் தமது நிட்டை கலையப் பெற்றனர். அங்ஙனஞ் செய்ய வல்லவர் யாவர் என அறிய முனிவுடன் வந்தவனைக் காணச் சிறிது தமது நெற்றிக் கண்ணைத்

திறந்தனர். அதினின்றும் போந்த தீ ஒளியானது மன்மதன் ஆவியைக் கொள்ளை கொண்டது, உடனே அவன் வேரற்ற மரம்போலக் கீழே சாய்ந்து மடிந்தான்.

இங்ஙனம் மன்மதன் பட்டொழிந்த செய்தியை அவன் மனைவியான இரதிதேவி யறிந்தனள். அவள் உடனே தேவர்களிடம் சென்று தன் குறையைக் கூறித் துக்கித்தாள். அதுகேட்ட இமையவர் வருந்திக், கயிலையங்கிரி சென்றனர். ஆங்கு அவர்கள் சிவபெருமானைப் பணிந்து, "சுவாமி, யாங்கள் இன்னும் எவ்வளவு காலம் அவ்வசுரரின் கொடிய ஆக்கினைக்கு உட்பட்டு நடக்க வேண்டுமோ, அறிந்திலம்; யாம் அனுப்பிய மன்மத வேளைத் தேவரீர் எரித்தருளினீர்; இங்ஙனம் செய்வது தேவரீருக்கு ஏற்குமோ! இன்னமும் உமக்கு எம்பால் கிருபை பிறக்கவில்லையா?" என்று வேண்டினர்.

அப்போது யோக நிட்டை நீங்கப் பெற்ற நிமலன் தேவர்களை நோக்கி, "தேவர்காள், இனி நீவிர் வருந்த வேண்டாம்; யாம் இன்னே சென்று அம்பிகையை மணந்து ஒரு புத்திரனை யளிக்கிறோம்; நீவிர் சென்மின்," எனப் புகன்று அவர்களை யனுப்பியருளினர்.

பின்னர் சிவபெருமான் இமயகிரி சார்ந்து ஒரு முதுமறையவன் உருக்கொண்டு பார்வதி

முன்பு தோன்றியருளினர். அந்தணர் வரவுகண்ட அணங்கு அவர் திருவடி தொழுது ஓர் ஆதனத்தில் இருத்தினள். பின்பு வேதியர் அவளை நோக்கி, "பெண்ணே, நீ யாரைக் குறித்து எதற்காகத் தவம் புரிகின்றாய்?" என்று கேட்டார். அதற்குப் பார்வதி, "சுவாமி, யான் சிவபிரானை மணமுடித்துக் கொள்ளக் கருதியுள்ளேன்; என் எண்ணம் ஈடேற யான் அவரைத் தியானித்துத் தவம் புரிகின்றேன்," என்றனள்.

அதுகேட்ட அந்தணனாகிவந்த அண்ணல் அவளை நோக்கிப் "பேதாய், நாடற்று, வீடற்று, ஆடையற்றுத் திரியும் ஆண்டியையோ மணக்கப் போகின்றாய்! நன்று, நன்று!" என்று பரனை இகழ்ந்துரைத்தனர். இம்மொழி கேட்கச் சகியாத மங்கை வெகுண்டு "வேதியரே, லோகநாயகரான சிவபெருமானை இகழலாமோ? நீதியோ? போதும், போதி அப்பால்," என்று மொழிந்தனள். அதற்கு ஈசன், "பாவாய், வருந்தாதே; என்னை நீ, மணந்து கொள்ளுவதற்காகவே யான் அவரை இழித்துக் கூறினேன்," என்று சொன்னவுடன் பார்வதி விடையிறுக்க மாட்டாமல் மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்து மாடத்தின் ஒரு மூலைக்குச் சென்றனள்.

அப்போது முக்கண்ணப் பெருமான் தமது சுயவடிவு கொண்டு அவள் முன்பு தோன்றினர்.

எம்பெருமானைக் கண்ட ஏந்திழை உவகையும் அச்சமும் எய்தியவளாய்ச் சற்று நாணங்கொண்டு அவரைப் பணிந்து, "சுவாமி,

அடிய னேன்அறி யாத்தனத் தால்உமைக்
கொடிய சொற்கொடு கூறிவை திட்டஎன்
நெடிய குற்றத்தை நீக்கி மகிழ்ந்து எனைக்
கடிதில் வந்து கடிமணம் செய்குவீர்"

என்று பிரார்த்தித்தனள். அதற்கு ஈசன், "பார்வதி, நீ கூறின தூற்றுமொழியை யாம் ஏத்து மொழியாகக் கொண்டனம்; இனி நீ புனதுமெய் வாடத் தவம்புரிய வேண்டாம்; நாளை யாம் நின்னை மணமுடித்துக் கொள்ளுகிறோம்," என்று அருளினர். மங்கையும் உவந்து தவச்சாலை துறந்து மாளிகை சென்றனள். ஆங்கு இமவானும் அவன் தேவியும் அவளை அன்போடு வரவேற்றனர்.

பார்வதியைப் போகவிடுத்துப் பரமசிவன் கயிலை யடைந்தருளினர். ஆண்டு அவர் சப்தரிஷிகளை நினைத்திட, அவர்கள் எம்பெருமான் முன்பு தோன்றினர். பகவான் அன்னோரைப் பார்த்து, "முனிவீர், நீவிர் இமவானை யணுகித் தன் மகளை எமக்குப் பாணிக்கிரகணஞ் செய்து கொடுக்க வினவுதிர்," எனலும், இருடியர் அங்ஙனமே புரிவதாக வாக்களித்துச் சென்றனர்.

பின்பு மாதவ மாமுனிவர் இமாசலம் நண்ணி இமவானைக் கண்டனர். தவ சிரேஷ்டரைக்

கண்ணுற்ற காவலன் அவர்களை எதிர்கொண் டழைத்துத் தக்க ஆசனத்தில் அமர்த்தி, "ஐயன் மீர், நீவிர் இவண் எய்தியது என்னை?" என வின வினன். அதற்கு முனிவர் எம்பெருமான் தம்பால் புகன்றதைப் புகலவும், அவன் களிப்புற்று அங் ஙனஞ் செய்ய இசைந்தான். மீண்டும் தவசியர் கயிலையடைந்து எம்பெருமானிடம் இமவான் தனது மகளை அவருக்கு வதுவை செய்து கொடுக்க இசைவதாகக் கூறினர்.

இஃது இவ்வாறாக, இமவான் தேவதச்சனை அழைப்பித்து ஓர் அழகிய விவாக மண்டபம் அமைக்குமாறு உத்திரவிட்டனன். அப்பால் அவன் சிவபிரானை யடைந்து அவரை வணங்கி, "சுவாமி, பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் விவாக முகூர்த்தம் நடக்க வேண்டுமெனக் கணிதமக்கள் கூறியுள்ளார். ஆகவே தேவரீர் அன்றைத் தினம் எழுந்தருளி அடியேன் மகளை மணம்புரிந்து கொள்ள வேண்டுகிறேன்," என்று பிரார்த்தித்தனன். ஈச னும் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி யரு ளினர். இமவானும் தன் இருக்கை நோக்கி னன்.

பின்னர் ருத்திரமூர்த்தி நந்தி தேவனை நோக்கி, "நமது விவாகத்திற்குச் சகல தேவர்களும் வருமாறு அவர்களிடங் கூறிடுக," என்றருளினர்.

அங்ஙனமே நந்திநாதன் எல்லாத் தேவர்களையும் அழைத்துக் கொண்டு கயிலை வந்து சேர்ந்தனன். சுரர்கள் அனைவரும் சிவபெருமானைப் பணிந்து மகிழ்ந்தனர்.

அப்போது பிரமதேவன் சிவபிரானுக்கு மகுடம், ஆபரணம் முதலியன நல்கினன். பகவான் அவற்றை ஏற்றுத் தரித்துக்கொண்டு, விடையேறிச் சுரர்சூழ இமயகிரி சார்ந்து முடிவில் இமவான் மாளிகை வந்து அடைந்தருளினர்.

அக்காலை இமவான் சிவபெருமானை எதிர் சென்று அழைத்துக்கொண்டு வந்தனன். பின்பு யாவரும் வதுவைக்களம் நண்ணினர். ஆங்கொரு அரியாதனத்தின்மீது சிவபெருமான் அமர்ந்தருளினர். அப்போது பூமியின் தென்திசை உயர்ந்து வடதிசை தாழ்ந்தது. அதன் பயனாகத் தேவர்கள் அனைவரும் வருந்தினர். அதுகண்ட பகவான் அகஸ்திய மாமுனிவரைத் தென்திசைக்கு ஏகுமாறு கூறியருளினர். அம்முனிவர் அவண் சென்றதும் பூமி முன்புபோல ஏற்றத் தாழ்வின்றிச் சமநிலை யடைந்தது. அது நோக்கிய யாவரும் சந்தோஷித்தனர்.

பின்பு பார்வதி அரம்பையர்சூழ விவாக மண்டபம் வந்தணைந்தனள். வந்தவுடன் அவள் அரனை வணங்க, அவர் அவளைத் தமது பக்கத்தில் இடப்பட்டிருந்த ஓர் ஆசனத்தில் அமருமாறு

கூறியருளினர். அவளும் அங்ஙனமே அமர்ந்தனள். அப்பால் இமவான், தன் மனைவி நீர் வார்க்க, எம்பெருமான் திருவடிகளை விளக்கி அவற்றைச் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்கரித்தனன். அதன்பின் அவன் பார்வதி கரத்தைப் பகவான் கரத்தில் வைத்து, 'உமக்கு எனது மகளை நல்கினேன்,' என்று சொல்லித் தாரை வார்த்துக் கொடுத்தான். அப்போது தேவதுந்துபி முழங்கிற்று ; நான்மறை ஆர்த்தன ; பெண்கள் வாழ்த்துப் பாக்கள் பாடி அயினிநீர் சுழற்றினர்.

பிறகு பிரமதேவன் விவாகச் சடங்கைச் செய்ய ஆரம்பித்தனன். தேவர்கள் வேத மந்திரம் ஓதினர் ; குறித்த நேரத்தில் மாங்கலியதாரணம் ஆயிற்று. மணப்பந்தலிற் கூடியிருந்தோர் அனைவரும் ஆனந்தவாரிதியில் ஆழ்ந்தனர். அப்பால் தேவர்களும், இமவானும், அவன் மனைவியும் சிவபிரானை வணங்கினர். இவ்வாறாக மணச்சடங்கு வெகு விமரிசையுடன் இனிது நடந்தேறியது.

அப்போது இரதிதேவி சிவபெருமானைப் பணிந்து," சுவாமி, அடியாள் நாதனை யளித்திடுக," என்று வேண்டினள். அங்ஙனமே பகவான் அவள் பிரார்த்தனைக்கு இரங்கி, மன்மதனை நினைத்தருளினர். உடனே அவன் தோன்றினன். அக்

காலே ஈசன் இரதிதேவியைப் பார்த்து, "நங்காய், மன்மதவேள் உனக்குத்தவிர மற்ற யாவர் கண்ணுக்கும் புலப்படான்; இனி நீவிர் இருவீரும் முன்புபோல இனிது வாழ்க," என்று ஆசீர்வதித்தருளினர்.

பின்னர் செஞ்சடில அண்ணல் யாவருக்கும் விடைஈந்து பார்வதிதேவி சகிதம் விடையேறி கயிலேயங்கிரிக்கு எழுந்தருளினர்.

தெய்வயானை பரிணயம்.

வெகுகாலத்திற்கு முன்பு திருமால் மக்களில் ஒருத்தியான அமுதவல்லி என்றொரு தெய்வ கன்னிகை இருந்தனள். அவள் சிவபெருமானின் இளைய புத்திரரான சுப்பிரமணியக் கடவுளை மணந்துகொள்ள உறுதி கொண்டனள். ஆகவே அந்நங்கை சரவணப்பொய்கை யடைந்து ஆங்கு ஷண்முகநாதனைக் குறித்துத் தவம் புரிந்தனள்.

சிலகாலத்திற் கப்பால் முருகக் கடவுள் அவள் முன்புதோன்றி, "ஒண்டொடீ, உனக்கு என்ன வேண்டும்?" என வினவியருளினர். அதற்கு அமுதவல்லி, "சுவாமி, அடியாள் தேவரீரை எனது நாயகனாக வரித்துள்ளேன்; என் விருப்பத்திற்கு இணங்கி என்னை மணந்திடவே, யான் தேவரீரைத் தியானித்துத் தவம் புரியலானேன்; ஆகவே தேவரீர் என் வேண்டுகோளுக்கு இணங்கி என்னை மணக்க வேண்டுகிறேன்," என்று வேண்டினள்.

அதுகேட்ட ஆறுமுகப் பெருமான் அவளை நோக்கி, "அமுதவல்லீ, நீ சிலகாலம் இந்திரன் மகளாக அவனிடம் வளர்ந்து வருக; பின்னர் யாம் அவண் வந்து நின்னை மணக்கிறோம்,"

என்று கூறி மறைந்தருளினர். அமுதவல்லி அம்மொழி கேட்டதும் ஆனந்தமுற்றாள்.

முருகேசன் மொழிந்தவாறு அமுதவல்லி மூன்று வயது நிரம்பிய ஒரு குழந்தை வடிவு தாங்கி இந்திரனை நண்ணி, "வாசவா, யான் திரு மால் மகள்; என்னை நீ வளர்த்திடுக," என்றனள். அதுகேட்ட தேவேந்திரன் சாலவும் மகிழ்ந்து தனது ஐராவதமாகிய யானையை நோக்கி அவளை வளர்த்து வருமாறு ஆக்ஞாபித்தனன்.

அங்ஙனமே ஐராவதம் அக் குழந்தையை வெகுசெல்வமாக வளர்த்து வந்தது; அதற்கு ஒரு தீங்கும் நேரிடாதவாறு பாதுகாத்து வந்தது. இன்னணம் அமுதவல்லி யானையால் வளர்க்கப் பட்டு வந்ததால் அவளுக்குத் தெய்வயானை என் றொரு பெயர் வரலாயிற்று. குழந்தைப் பருவம் நீங்கிய பின்னர் அவள் இந்திரனிடம் வசித்து வந்தனள்.

சிலவாண்டு கழிந்த பின்பு தெய்வயானை விவாகத்திற்கு ஏற்ற கன்னிகையாக விளங்கினள். அப்போது இந்திரன் அவளை முருகக்கடவுளுக்கு மணம் முடித்துக் கொடுக்க எண்ணினன். பின்ப வன் தனது எண்ணத்தைத் திருமால், பிரமன் முதலான தேவர்கட்குத் தெரிவித்தனன். அதற்கு அவர்கள் மகிழ்வெய்தி அவ்வாறு செய்வது உசி தமே என உரைத்தனர். உடனே மகபதி ஒரு

தூதனைப் பார்த்து, "நீ விரைந்து சென்று மேரு பர்வதத்தில் வசித்து வரும் எனது மனைவியையும் மகளையும் அழைத்துக் கொண்டு வருக," என்று கூறியனுப்பினன். தூதனுந் துனைவிற்சென்று அவ்விருவரையுங் கூட்டிக்கொண்டு வந்தனன்.

பின்னர் இந்திரன் வானவர் குழுவோடு திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்தனன். ஆங்கொரு விடுதியில் இந்திராணியும் தெய்வயானையும் தங்கியிருந்தனர். இந்திரனும் தேவர்களும் முருகவேளை நண்ணி அவர் திருவடி தொழுது, "சூரனைக் கூறு செய்த சூர! தேவர்சிறை மீட்டருளிய தேவ! தேவரீர் புரிந்த உதவியை மறவாமல் நன்றியறிவு தோன்ற நாங்கள் ஏதேனுஞ் செய்யக் கூடியது உளதோ? எதுவும் இல்லை; ஆனாலும் அடியேன் ஒன்று செய்ய வல்லேன்; அடியேன் மகளை மணந்து எம்மை உய்விக்க வேண்டுகிறேன்," என்று புகன்றனன்.

அதற்கு முருகக் கடவுள் இந்திரனைப் பார்த்து, "அமரேச, நீ கூறிய அம்மடவரல் முன்பு எம்மை மணக்க வேண்டித் தவங்கிடந்து வரம் பெற்றுள்ளாள்; ஆதலால் உன் விருப்பத்தின்படி நாளைத்தினம் அவளை மன்றல் செய்குவம்," என அருளினர். அதுகேட்டதும் இந்திரன் உவகை மிகுந்து, "சுவாமி, எனது வேண்டுகோளுக்கு உடன்பட்டதால், நாங்கள் மேன்மை

யுற்றோம்,'' எனக் கூறிக் கோயில் விடுத்து வாயில் அடைந்தனன்.

ஆங்கு நின்றிருந்த காவலர் இந்திரனைப் பார்த்து, "தேவர்க்கரசே, நாங்கள் செய்ய வேண்டியது யாது?'' என்று கேட்கவும், மகபதி, "நாளை இவண் தெய்வயானைக்கும் கந்தசுவாமிக்கும் விவாகம் நடக்கப் போவதால், அதனைப் பூதலத்தில் வாழும் முசுகுந்தன் முதலான அரசர்களுக்குத் தெரிவித்து அவர்களை அழைத்துக் கொண்டு வருக,'' எனலும், அவர்கள் அகன்றனர்.

அதன்பின்பு அமரர்கோமான் தேவதச்சனை அழைப்பித்து ஓரழகிய விவாக மண்டபம் அமைக்குமாறு ஆக்ஞாபித்தனன். சிற்பியும் ஷண்முகநாதன் அமர்ந்திருக்க ஓர் அரியாதனமும் விவாகத்தைக் கண்ணுற வந்த தேவர்களுக்கும் அரசர்களுக்கும் தக்க ஆசனங்களும் அமைத்து மணப்பந்தலை வெகு சிறப்புடன் அலங்கரித்து வைத்தனன்.

சற்று நேரத்தில் யாவரும் மணப்பந்தலில் வந்து குழுவினர். தேவேந்திரன் அவர்கள் அனைவரையும் முகமன்கூறித் தக்க ஆசனங்களில் அமர்த்தினன். கந்தர்வமாதர், முனிபத்தினிமார் முதலாரோரை இந்திராணி உபசரித்தனள். வந்தவர்கள் அனைவரும் இந்திரனையும் இந்திராணியையும் வணங்கி வாழ்த்திக் களிப்புற்றனர்.

அப்போது அமரமங்கையரிற் சிலர் தெய்வ யானைபால் வந்து அவளை வணங்கி, "இந்திரன் மகளே, நீ இப்பொழுது ஆறுமுக வள்ளலை மணந்து யாவர்க்கும் தலைவியாக விளங்கப் போகிறாய்," என்று புகழ்ந்துரைத்தனர். அதன்பின்பு அவர்கள் அவளை வாசனைச் சரக்குகள் கூந்தலில் தடவிப் பனிநீரில் நீராட்டிச், செய்பட்டுடுத்தித், திலகம் தீட்டிப், பல அணிகலன்களைப் பூட்டி அலங்கரித்தனர். அப்போது தெய்வயானை இயற்கை அழகோடு செயற்கை யழகுசேர, மிகுந்த சீர்பெற்று விளங்கினள்.

பின்பு இந்திரன் பிரமதேவனைப் பார்த்து, "சுவாமி, மணப்பந்தலில் யாவரும் வந்து கூடி யுள்ளார்; இனித் திருமணச் சடங்கை ஆரம்பிக்க லாமே," என்று சொன்னான். உடனே சதுர்முகத் தேவன் ஷண்முகப் பெருமானை நண்ணி இந்திரன் கூறியதை அவர்பால் விண்ணப்பித்தனன். எம்பெருமானும் இசைந்து திருமணக் கோலங் கொண்டு விவாக மண்டபம் அடைந்து அரியாதனத்தில் அமர்ந்தருளினன். தேவர் முதலானோரும் தத்தமது ஆசனங்களில் அமர்ந்தனர்.

அக்காலை ஆலமுண்ட அண்ணல் உமாதேவி சமேதராய்க் குமாரசுவாமி திருமணத்தைக் கண்டு களிக்க அந்தரத்தில் தோன்றியருளினர். எம்பெருமான் தோற்றத்தைக் கண்ணுற்றவுடன், குமார

சுவாமி அவ்விருவர் மலர்ப்பதம் பணிந்தனர். பின்னர் இந்திரன் முதலான தேவர்களும் மற்றவரும் அவர்களை வணங்கி மகிழ்வுற்றனர். அப்பால் ஈசனும் கௌரிதேவியும் மணப்பந்தல் அடைந்து தமக்காக அங்கு வந்திருந்த மணித்தவிசில் எழுந்தருளி யிருந்தனர்.

பின்னர்க் கஞ்சாதனத்தோன் இந்திரனைப் பார்த்து, "இனித் திருமணம் தொடங்கலாம்," என்றனன். உடனே வாசவன் ஒற்றர் மூலமாய்த் தெய்வயானைக்குச் செய்தி தெரிவித்தனன். அம்மங்கையும் பல தெய்வமாதர் புடைசூழ மெல்ல நடந்து மணப்பந்தல் வந்து சேர்ந்தனள். அவளை உமையாள் அன்போடு அழைத்துச் சென்று குமாரசுவாமி பக்கத்தில் இருத்தினள். அக்கோலத்தைக் கண்ட இந்திரனும் இந்திராணியும் கரையில் பேருவகை கொண்டனர். தேவர்களும் முனிவர்களும் அத் தம்பதிகளைத் தொழுது மகிழ்ச்சி மிகுந்தனர்.

அப்பால் இந்திரன் நன்னீரால் முருகக் கடவுள் திருவடிகளை விளக்கிச் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்கரித்தனன். பின்பவன் தெய்வயானை கரத்தைக் குமரக்கடவுள் கரத்தில் வைத்துத் தாரைவார்த்துக் கொடுத்தனன். வேத விதிப்படி விவாகச் சடங்கு நடைபெற்றது. பின்பு

குமாரசுவாமியும் தெய்வயானையும் உமாகேசுவரரை வணங்கினர்.

அங்ஙனம் பணிந்த அவ்விருவரையும் சிவபெருமானும் பார்வதிதேவியும் தழுவித் தம்மருங்கில் இருத்தி, உச்சிமோந்து, அவர்களைப் பார்த்து, "எமக்குள்ள முதன்மை உங்களுக்கு அளித்தனம்," என்று கூறி ஆசீர்வதித்தருளினர். பார்வதி பரமேச்வரரால் ஆசிகூறி அருளப்பட்ட அத் தம்பதிகளைப் பிரமன் முதலான தேவர்களும், முனிவர்களும் வணங்கினர்.

அக்காலை திடீரென்று சிவபெருமான் தமது பரிவாரத்துடன் மறைந்தருளினர். அதுகண்ட மண்ணவரும் விண்ணவரும் விம்மிதமுற்று எம்பெருமான் நாமத்தை உச்சரித்து ஆரவாரித்தனர். அவர்கள் குமாரசுவாமியையும் தெய்வயானையையும் தரிசித்து உமாமகேசுவரர் மறைந்ததால் உண்டாகிய கவலை நீங்கினர்

பின்பு குமாரசுவாமி தமது மனைவி சகிதம் ஆலயம் சென்றருளினர். அவர்களைத் தொடர்ந்து யாவரும் சென்றனர். வாத்திய கோஷம் முழங்கியது. மங்கையர் மங்களப் பாட்டுக்கள் பாடினர். கோயில் சென்றடைந்ததும் குமரவேள் தெய்வயானை அம்மையுடன் ஏகாந்தமாக இருக்க நினைத்துத் தேவர்களுக்கு விடைகொடுத் தனுப்பினர். அவர்கள் அனைவரும் தம் இருப்பிடம்நோக்கினர்.

அப்பால் இந்திரன் முசுகுந்தன் முதலான மண்ணரசர்களுக்குப் பெரிய விருந்தொன்று செய்தனன். அவர்கள் காமதேனு அளித்த அறுசுவை உண்டிகளை வயிறார உண்டு மகிழ்வெய்தினர். பின்பவர்கள் பட்டாடைகளும், ஆரங்களும், ஆபரணங்களும், நிதித்திரளும், இந்திரனால் நிரம்ப அருளப் பெற்றுத் தம் நாடடைந்தனர்.

மீனாக்ஷி திருமணம்

b3b N27

மீனாட்சி திருமணம்.

மண்ணுலகில் வாழும் மனித வர்க்கத்தில் பலபிரிவுகள் இருப்பதைப்போலத் தேவர்களிலும் பல வகுப்புகள் உண்டு. அவர்கள் கின்னரர், கிம்புருடர், யட்சர், வித்தியாதரர் என்பவர்களாம். இறுதியிற் கூறிய வித்தியாதரர் வகுப்பில் விசுவாவசு என்னும் தேவன் ஒருவன் இருந்தனன். அவனுக்கு வித்தியாவதி என்றொரு பெண் உண்டு. அவள் ஒரு நாள் தனது தந்தையைப் பார்த்து, "எந்தாய், யான் உமாதேவியைக் குறித்துத் தவம் இயற்ற ஓர் இடம் கூறிடுக," எனக் கேட்டனள்.

அதற்கு விசுவாவசு அவளை வியந்து, "குழந்தாய், நீ கொண்ட எண்ணம் சாலவுஞ் சிறந்ததே; நான் கூறும் ஸ்தலத்திற்குச் சென்று தவம் செய்தால் நீ புகழ் பெற்று விளங்குவாய்; அந்த இடத்தைக் கூறுகிறேன், கேள். பூலோகத்தில் மதுரை என்றொரு நகர் உளது; அதனைப் பெரியோர் பூலோக கைலாயம் எனவுங் கூறுவர்; தேவர்களும் அவண் சென்று பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி ஈசனைப் பூசித்து மேன்மை யடைந்துள்ளார்; ஆதலால் நீ அந்நகர் அடைந்து உமா

தேவியை நினைத்துத் தவம் இயற்றிடுக,'' என்றனன்.

தந்தை மொழிந்தவாறு தனயை மதுரை மாநகர் வந்தணைந்தாள். ஆங்கு அவள் சோம சுந்தரக் கடவுள் ஆலயத்தின் நடுவில் இருக்கும் பொற்றாமரைக் குளத்தில் ஸ்நானஞ்செய்து தவம் புரிய ஆரம்பித்தனள். அவள் சிலகாலம் உணவு கொண்டாள் ; சிலகாலம் ஒன்றுங் கொள்ளாது பட்டினி கிடந்தாள் ; சிலகாலம் நீர்மட்டும் பருகினாள் ; சாந்திராயண விரதத்தை யனுஷ்டித்தாள். இவ்வாறு வித்தியாவதி மிகுந்த பக்தியுடன் கௌரி தேவியைப் பூசித்துத் தவங் கிடந்தனள்.

இன்னணம் வித்தியாவதி பக்தி கொண்டு இயற்றிய பூசனைக்கு அவளை வியந்த உமையாள் மூன்று வயது நிரம்பிய ஒரு குழந்தை வடிவு கொண்டு அவள் முன்பு தோன்றினள். அது கண்ட அணங்கு அம்மையின் திருவடிகளைத் தொழுது,

''போதக ஆடை போர்த்த புனிதனின் கிழத்தி போற்றி
தீதற அடியார்க் காக்கும் தேவனின் துணைவி போற்றி
பூதலத் துள்ள யார்க்கும் பொருந்திய அன்னை போற்றி
காதலை யளித்தி நின்னைக் களிப்புடன் தினமும் போற்ற,''

என்று தோத்திரித்து நின்றனள்.

அப்போது சங்கரி வித்தியாவதியைப் பார்த்து, ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று வினவி

னள். அதற்குச் சேயிழை, "அன்னாய், யான் உம்மைத் தரிசிக்கும் பேற்றைத் தவிர வேறொன்றும் வேண்டிலன்," என்றனள். மீண்டும் உமையாள் அவளை நோக்கி, "வித்தியாவதி, இன்னும் வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்," எனலும், மாது, "தாயே, தேவரீர் அடியாள்பால் பெண்ணாக அவதரிக்கவேண்டும்," என்று வேண்டிக் கொண்டாள். அதற்கு உமாதேவி, "நீ பாண்டியநாட்டு வள்ளலான மலையத்துவஜனுக்கு மனைவியாகுக; பின்பு யான் உனக்குப் புத்திரியாக அவதரிக்கின்றேன்," எனக் கூறி மறைந்தருளினள்.

அப்போது பாண்டிய நாட்டை மலையத்துவஜன் என்பவன் அரசு செய்து வந்தனன். அவன் அரசியலில் குடிகள் அனைவரும் க்ஷேமமாக வாழ்ந்து வந்தனர். அவ்வரசன் இரப்பவர்க்கு ஈதலில் கர்ணனை நிகர்த்தவன்; செம்மனத்தினன்; சிறந்த வீரன்; சிவபக்தன்; நாடோறும் ஆலயம் நண்ணிச் சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வந்தனன்.

இத்தகைய மலையத்துவஜ மன்னவன் சூரிய குலத்தில் உதித்த சூரசேனன் புதல்வியான காஞ்சனமாலை என்பவளை மணம்புரிந்து கொண்டனன். இவள் தான் விசுவாவசு மகளான வித்தியாவதியாவாள். மலையத்துவஜனும் காஞ்சனமாலையும்

நகமுஞ் சதையும்போல வெகு நேசமுடன்வாழ்ந்து வந்தனர்.

சாதாரணமாக உலகத்தில் மக்கள் இல்லாத மானிடா பொன், பூமி, புகழ் முதலியவற்ருல் என்ன பயனை அடைவர்? அவர்கள் வாழ்நாள் முழுவதுந் துன்பகரமாகவே இருக்கும் அன்ருே! அத்தகைய புத்திரன் இல்லாத குறைக்கு நம் மலேயத்துவஜன் இலக்காயினன். அதனுல் அவன் தன் மனம் நொந்து, உடல் மெலிந்தனன். ஆயினும் வள்ளல் தேர்ந்து பல தான தருமங்கள் செய்தனன். என்ன செய்தும் அவன் புத்திர பாக்கியம் பெருது போயினன்.

கடைசியாக அவன் அசுவமேத யாகம் புரியலாயினன். அங்ஙனம் நூறு யாகம் புரிபவர் இந்திர பதவிக்கு உரியவராவர். மலேயத்துவஜனும் தொண்ணூற்ருென்பது யாகம் இயற்றினன். நூருவது வேள்வியையும் செய்யத் தொடங்கினன்.

அப்போது இந்திரன் அவன் முன்பு தோன்றி "மன்னவ, புத்திரனில்லாதவர் புத்திரகாமேஷ்டி யாகம் அன்ருே புரிதல் வேண்டும். அவ்வாறு செய்வதை விட்டு அசுவமேத வேள்வி இயற்றினுல் என்ன பெறுவாய்! ஆதலால் அரச, நீ கவலே யொழிந்து அவ் யாகத்தைச் செய்து

புத்திரப் பேறு அடைந்து புகழ் பெற்றிடுக," என்று கூறி மறைந்தனன்.

அதுகேட்ட மலையத்துவஜன் மகிழ்வடைந்து புத்திரகாமேஷ்டி யாகம் செய்யத்தொடங்கினன். மன்னவனும் தேவியும் பொற்றாமரைக் குளத்தில் ஸ்நானஞ் செய்து தூய ஆடை தரித்து வேள்விச் சாலை நண்ணினர். யாகம் ஆரம்பமாயிற்று. வேதியர் மந்திரம் ஓதினர். ஓமகுண்டத்தில் நெய், பொரி முதலியவை ஆகுதி செய்யப்பட்டன.

பின்பு அவ்வோம குண்டத்தினின்றும் உமா தேவி ஒரு குழந்தை உருத் தாங்கி வெளி வந்தனள். அச் சேய் மூன்று வயது நிரம்பப் பெற்று மூன்று மார்புகளுடன் விளங்கியது. அதற்குத் தடாதகை என்பது பெயர். அது நேராகக் காஞ்சனமாலை மடிமீது வந்து தங்கியது. அதனைக் கண்ட அரசி ஆனந்த முற்றாள். வேள்விச் சாலையில் கூடியிருந்தோர் அனைவரும் மகிழ்ச்சி மிகுந்தனர்.

இவ்வாறு யாவரும் மகிழ்ந்திருக்க மலையத்துவஜன் மட்டிலும் வருத்தங் கொண்டான். அவன், "ஈசா, யான் புத்திர பாக்கியம் பெறப் புத்திரகாமேஷ்டி யாகம் புரிந்தேன்; புத்திரனுக்குப் பதிலாகப் புதல்வியைக் கொண்டேன்; அவளோ இதர மாதரைப்போலல்லாமல் மூன்று மார்புகளைக்

கொண்டிருக்கின்றனள் ; அவளைக் கண்டு உலகம் ஏசாதோ ! மற்றும் நான் மாண்டபின்பு யார் இந் நாட்டை யாள்பவர் ?" என்று தனக்குட் சாற்றிச் சூரியன் முன்பு சந்திர வொளியைப்போல முகப் பொலிவற்றிருந்தனன்.

அப்போது, "பாண்டிய நாட்டுக் காவல, நீ இக் குழந்தையைக் கண்டு மனம் வருந்தாதே ; புத்திரனுக்குச் செய்ய வேண்டியவை அனைத்தை யும் இப் பெண்ணுக்குச் செய்திடுக ; இவள் உனக் குப் பின்பு அரசுபுரிந்து கீர்த்தி பெறுவாள் ; இவளுக்கு ஏற்ற கணவன் வாய்த்தகாலை அவள் பால் இருக்கும் மூன்றுவது மார்பு மறைந்துவிடும் ஆதலால் நீ கவலை கொள்ளற்க," என்று அசரீரி கூறிற்று.

அதுகேட்ட மலையத்துவஜன் வருத்தம் நீங்கி மகிழ்வு கொண்டான். எளிய மக்களுக்கு அன்னம், வஸ்திரம் முதலியன அளித்தான் ; சிறைக் கூடத்திலிருந்த கைதிகளை விடுவித்தான் ; சிற்றரசர் செலுத்தி வந்த கப்பத்தை நிறுத்தினன்; ஏழுவருடங் கழியும் வரை குடிகளிடமிருந்து பகுதிப் பணம் வசூலிக்கக் கூடாதென உத்திரவு பிறப்பித்தான்.

பாண்டியன் மகளான தடாதகைக்கு மீனாட்சி, அங்கயற்கண்ணி என்று வேறுபெயர்களும் உண்டு. அவள் மீனை நிகர்த்த அழகிய விழிகளைப் பெற்றி

ருந்ததால் அவளை யாவரும் அந்நாமங்களால் அழைத்து வந்தனர்.

பின்பு மீனாட்சி தனது இளமைப்பருவத்தில் கல்வி கற்க ஆரம்பித்தனள். அவள் சகல கலைகளையும் ஐயந்திரிபற வோதினள்; அரசர் தெரிந்து கொள்ள வேண்டிய யானை யேற்றம், பரி யேற்றம் வில், வாள் முதலான வித்தைகளில் தேர்ச்சி பெற்று விளங்கினள். அதுகண்ட மலையத்துவஜன் அவளைப் பெரிதுங் கொண்டாடி மனமுவந்தனன்.

இங்ஙனம் சில வருடங்கழிய மலையத்துவஜன் மூப்புப் பருவம் அடைந்தான். ஆகவே அவன் மீனாட்சிக்குப் பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்தான்; சோதிடர்களைக் கொண்டு நாள் குறித்தான். குறித்த நாளில் அவன் மீனாட்சியை நன்னீர் கொண்டு நீராட்டி, அரச உடை தரிப்பித்துச் சிம்மாசனத்தில் அமர்த்தினன். பின்பவள் சிரசில் கிரீடம் வைக்கப்பட்டது. அப்போது பல வித வாத்தியங்கள் முழங்கின; அந்தணர் ஆசி கூறினர்; பாவையர் இனிய கீதஙகள் இசைத்தனர். இவ்வாறு வெகு ஆடம்பரத்துடன் மீனாட்சி பட்டாபிஷேகஞ் செய்துகொண்டனள்.

பிறகு மலையத்துவஜன் வயது மிகுந்து, மெய் தளர்ந்து, ஒருநாள் மரணமடைந்தனன். மீனாட்சி அவனுக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களைச்

செவ்வையாய்க் குறைவின்றிச் செய்து முடித்தனள். அப்பால் அவளே ராஜீய விஷயங்களைக் கவனிக்கலானாள்.

மீனாட்சி மலையத்துவஜனைப் போலவே வெகு நேர்மையுடன் செங்கோல் செலுத்தி வந்தனள். அவள் நாடோறும் கதிரவன் கீழ்த்திசையிற் றோன்று முன்னமே எழுந்து பொற்றாமரை வாவியில் ஸ்நானஞ் செய்து ஆலயம் நண்ணிச் சுந்தர நாதனைத் தரிசித்து வந்தனள். பின்பவள் கொலுவில் அமர்ந்து ராஜீய வியவகாரங்களைக் கவனித்தனள்; வழக்குகளைத் தீரவிசாரித்துத் தீர்ப்புச் செய்தனள்; குடிகள் குறையை அவ்வப் போது கேட்டுத் தக்க ஏற்பாடு செய்தனள்; ஏழை மக்களுக்கு வேண்டியன வழங்கினள். இவ்வாறு மீனாட்சி நீதிவழுவாமல் அரசு புரிந்தனள்.

இங்ஙனமாக மீனாட்சி வதுவை செய்து கொள்ளத் தக்க பருவம் அடைந்தனள். அவள் அதனைக் கருதாதிருந்த போதிலும் காஞ்சனமாலை கவலை கொண்டாள். இதனை யறிந்த மீனாட்சி, அவளைப் பார்த்து, "அன்னாய், எனக்கு மணம் ஆகாததை நினைந்து நீர் வருந்திப் பயன் என்ன; 'அவனன்றி யோரணுவும் அசையாது,' என்னும் முதுமொழியை அறியீரோ? ஆதலால், தாயே, நீர் கவலையற்றிரும். இப்பொழுது யான் திக்கு விஜயஞ் செய்து வரப்போகிறேன்; யான் சென்று

வந்த பின்னர் மணவிஷயத்தைக் கவனிக்கலாம்," என்று கூறி அவளைத் தேற்றினள்.

உடனே மீனாட்சி சதுரங்க சேனை சகிதம் திக்குவிஜயஞ் செய்யப் புறப்பட்டனள். அவள் நீதிநெறி தப்பி அகங்காரம் மிகுதியுங் கொண்டு அரசியற்றும் மன்னவரைச் சிறைசெய்து, அவர்கள் நாட்டைத் தன் வயப்படுத்திக் கொண்டாள். இங்ஙனம் பூலோகம் எங்கணுந் தன் வெற்றிக் கொடி நாட்டிய பின்பு தேவலோகஞ் சென்றாள்.

ஆங்கு இந்திரன், யமன், வாயு, வருணன், அக்கினி முதலான தேவர்களை வென்று இறுதியில் சிவபெருமானையும் வெல்ல நினைத்து கைலாசம் சென்றனள். அதுகண்ட நந்திகேசுவரர் பூதகணங்களோடு சென்று அவளை எதிர்த்தனர். இரு கட்சியினரும் தீரத்துடன் போர் புரிந்தனர். முடிவில் நந்திகேசுவரர் தோல்வி யுற்றனர், ஆகவே அவர் வெட்கிச் சிவபெருமானை யடைந்து நடந்த செய்தி யாவும் நவின்றனர்.

அது கேட்ட சடைமுடி அண்ணல்,

மடலவிழ் கொன்றை மாலை மதிநதி என்பு மிக்க
அடலுறும் அரவு தாங்கி அங்கையில் மழுமான் ஏந்திக்
கடலினுண் டானவெய்ய கடுவையுட் கொண்ட செம்மல்
கடிதினில் களம்வந் துற்றான் காரிகை முன்பு மன்னோ.

யுத்தகளம் வந்தடைந்த ஈசனைக் கண்டதும் ஏந்திழை வெட்கம் மிகுந்து தலை கவிழ்ந்தனள்.

அப்போது அவள்பால் இருந்த மூன்றாவது ஸ்தனம் மறைந்தது. உடனே ஒரு மந்திரி அவளை வணங்கி, அசரீரி வாக்கைக் கூறி, "அரசியே, சிவ பிரானே உமது கணவர்," என்றனன். எம்பெருமானும் அவளைப் பார்த்து, "மீனாட்சி, நீ செய்த திக்குவிஜயம் போதும்; இனி மதுரை செல்க; இன்றேழாவதுநாள் யாம் அவண் வந்து நின்னை மணக்கிறோம்," என அருளினர். ஈசன் கட்டளைக்கு அடங்கி மீனாட்சியாகி வந்த உமையாள் மதுரை மாநகர் வந்து சேர்ந்தனள்.

பிறகு விவாக முஹூர்த்த நாள் நிச்சயிக்கப் பட்டது. பற்பல தேசத்தரசருக்கும் மணவோலை அனுப்பப்பட்டது. குறித்த நாளில் யாவரும் மதுரை நண்ணிக் கலியாண மண்டபத்தில் வந்து கூடினர்.

பின்பு சிவபெருமான் சிவகணங்களும் தேவர்களும் புடைசூழ நான்மாடக் கூடல்நகர் வந்தருளினர். காஞ்சனமாலை, அமைச்சர் முதலானோர் சிவபிரானை எதிர்சென்று அழைத்தனர். யாவரும் விவாகமண்டபம் சேர்ந்தனர். ஆங்கு சிவபெருமான் இரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்தருளினர்.

அப்போது தோழிகள் மீனாட்சியை அலங்கரித்து மணப்பந்தலிற்கு அழைத்துக் கொண்டு வந்தனர். முஹூர்த்தவேளை நெருங்கியது. அக்காலை திருமால் மீனாட்சியின் வலது கையைச் சிவ

பெருமான் வலது கரத்தில் வைத்துத் தாரை வார்த்துக் கொடுத்தருளினர். அப்போது தேவ துந்துபி முழங்கியது ; நான்மறை கோஷித்தன ; விண்ணவர் மலர்மாரி சொரிந்தனர். பின்பு சிவ பெருமான் திருமங்கலிய தாரணஞ் செய்தருளினர். வேதமுறைப்படி மணச்சடங்கு நிறைவேறியது. யாவரும் ஆனந்தமுற்றனர்.

உஷா பரிணயம்.

பல்லாண்டுகளுக்கு முன்பு மாவலி எனும் பேர் கொண்ட அசுரர்கோன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பலி என்ற மற்றொரு பெயரும் உண்டு. அவன் நூறு புத்திரர்களைப் பெற்றுக் கொண்டனன். அவர்களில் பாணன் என்பவன் மூத்தவன். அவன் ஆயிரம் புயங்கள் பெற்று வீரத்திலும் பலத்திலும் இணையற்று விளங்கினன்.

பலிச் சக்கரவர்த்தி மாண்ட பின்பு பாணன் அரசுரிமை ஏற்றான். அவன் சோணிதபுரம் என்னும் ஊரைத் தலை நகராகக் கொண்டு அரசாட்சி புரிந்து வந்தான். அவன் வாத்தியம் வாசிப்பதில் மிகுந்த ஆவலுடையோன்; சிவன் அடியான்; நாடோறுந் தவறாமல் சிவ பூசை செய்து வந்தான். சிவபிரானும் அவன் கொண்டுள்ள பக்தியைச் சோதித்திட ஒரு சூழ்ச்சி இயற்றியருளினர்.

ஒருசமயம் சிவபெருமான் தாண்டவமாடியருளினர். அக்காலை பாணன் தனது ஆயிரங் கரங்களாலும் வாத்தியம் வாசித்தான். நர்த்தனத்திற்கு ஏற்ப அசுரன் வாத்தியம் இசைத்ததைச்

செவியுற்ற சிவபெருமான் மிகவும் சந்தோஷித்து அவனை நோக்கி, “ அசுரரேறே, நீ சிறிதும் மாறுபாடின்றி வாத்தியம் வாசித்ததைக் கேட்டு யாம் களிப்படைந்தோம்; நினக்கு வேண்டிய வரங்களைக் கேள் ; தருதும்,” என்றருளினன். அதற்கு அவன், “சுவாமி, தேவரீர் அடியேன் மாநகரைக் காத்து வரவேண்டும்,” என வேண்டலும், ஈசன் அங்ஙனமே அருளி மறைந்தருளினன்.

மற்றொரு நாள் பாணாசுரன் குழவிப்பிறை சூடிய குரிசிலைப் பணிந்து, “தேவ தேவ, சில காலமாக என்னை எதிர்ப்பவரின்றி எனது புயங்கள் தினவெடுக்கின்றன ; இனி என்னை எதிர்ப்பவரும் இப்பூதலத்தில் இருக்கின்றனரோ? அங்ஙனம் இருப்பின் அவன் யாவன்? என்று வருவான்?” என்று கர்வித்துக் கூறினான். அதற்கு அண்ணல், “பேதாய், யாம் உனக்குக் காவலாய் இருப்பதைக் கருதி இங்ஙனம் செருக்குடன் பேசினையோ? வல்லவனுக்கும் வல்லவன் வையகத்தில் உள்ளான்’ என்னும் நீதியை அறியாயோ? உன்னை எதிர்த்து வெல்லக் கூடியவன் ஒருவன் இருக்கிறான் ; உனது மாளிகையின் மீது விளங்கும் கொடி என்று அறுந்து கீழே விழுமோ அன்று உனக்கு நாசகாலம் வந்ததென அறிக,” என்று கனன்று கூறி யகன்றருளினன். அசுரனும் மனை நோக்கித் தன்னை எதிர்த்துப் போராடி வெல்ல

வல்லவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனன்.

இஃது இவ்வாறாகப் பாணனுக்கு உஷை என்றொரு மகள் இருந்தாள். அவள் அழகிலுங் குணத்திலுஞ் சிறந்தவள்; ஈசுவரிபால் மிகுந்த பக்தி பூண்டவள். ஒருநாள் உஷை உமாதேவியைப் பணிந்து, "அன்னாய்! எனக்கு ஏற்ற கணவன் யாவன்?" என வினவலும், தேவி, "நங்காய், இன்னுஞ் சின்னாட் கழித்து நின் கனவில் பேரெழில் வாய்ந்த ஆடவன் ஒருவன் தோன்றி உன்னைச் சேருவான்; அவனே நினது காதலன்," என்றருளினள்.

அங்ஙனமே சிலநாட் சென்ற பின்பு ஒரு நாளிரவில் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி பேரனும் ப்ரத்யும்நன் புத்திரனுமான அநிருத்தனை அப்பாவை தன் கனவிற் கண்டாள். அவள் கனவில் அவனை மணந்து சுகித்துக்கொண்டிருப்பதாகக் கண்டு விழித்துப் பார்த்தனள்; அநிருத்தனைக் காணாது மதிமயங்கித் திகைத்தாள்; எவ்வழியாக அவன் சென்றிருக்கக் கூடும் என்று தனக்குட் கூறி ஐயுற்றாள்; 'என்னுருயிர்த் துணைவ, இங்ஙனம் நீர் என்னை மணந்து கைவிடல் நீதியோ? இதுவரை நீர் என்னருகில் இருந்து திடீரென்று எங்கு மாயமாய் மறைந்துசென்றீர்; நான் யாதுசெய்வேன்," என்று கூறிப் புலம்பிச் சோர்ந்தாள்.

இன்னணம் உஷை அன்றிரவு முழுவதும் உறக்க மின்றி அநிருத்தனை நினைத்து நினைத்து ஏக்க முற்றனள்.

பொழுது புலர்ந்ததும் சித்திரலேகை என்னும் தோழி உஷையை நண்ணி அவள் முக வாட்டத்தைத் தனது மாயை வித்தையினால் அறிந்து, "பூங்குழலாய், நீ விழைந்த அப் புருடன் யாவன்? எத்தகையன்? அவன் எங்கிருப்பவன்? உடனே கூறுதி; யான் கடிதிற் சென்று அவனை உன்பால் சேர்ப்பிக்கிறேன்," என்றனள்.

அது கேட்ட புனிதவதி, "தோழி, அவர் ஊர், பெயர், ஒன்றும் யான் அறியேன்; ஆனால் அவர் வனப்பைக் கூறுகிறேன்; நீல நிற வண்ணன்; தாமரைக் கண்ணன்; பீதாம்பரம் தரித்துள்ளான்; வாசனை பொருந்திய அழகிய பூமாலை அணிந்துள்ளான்; மங்கையர் விரும்பும் தடந் தோளான்," என்று கூறி நெஞ்சுருகினள்.

அப்போது சித்திரலேகை உஷையைப் பார்த்து இப்பாரிலுள்ள ஒவ்வொரு அரச குமரனையும் சித்திர ரூபத்தில் எழுதிக் காட்டுகிறேன்; அவற்றில் உன்மனதைக் கொள்ளை கொண்ட கோதிலானைக் குறித்திடுக," என்று சொல்லி அரச குமரர் அனைவர் உருவத்தையும் ஒன்றின்பின் னொன்றாக வரைந்து காட்டினள். அநேகமாக எல்லா உருவங்களையும் உஷை உதறிச் சித்திர பாவைபோல் மனங்

குழம்பி இருந்தனள். அப்பால் கிருஷ்ணபரமாத்மா உருவத்தைக்கண்டு புன்னகைபுரிந்து, இவர்போ லிருப்பர்; ஆனால் இவரன்று,' என்றனள். பின்பு ப்ரத்யும்நன் சித்திரங்கண்ட உஷை, "இவர் மேனி தான்; ஆனால் இவருமன்று," என்று நகைமுகங் கொண்டு நவின்றனள்.

முடிவாகச் சித்திரலேகை அநிருத்தன் உருவு தீட்டிக் காட்டினள். அது கண்ட உஷை உவகை மிகுந்து நாணத்துடன்,' இவர்தான், இவர்தான்' என்று சொன்னாள். அப்பொழுது சித்திரம் வரை வதில் வல்லவளான சித்திரலேகை உஷையைத் தழுவினவன் துவாரகாபுரி வாசன் பேரனே எனத்தெரிந்து அவளைப் பார்த்து, "யான் உன் மனதைக்கவர்ந்த உத்தம புருடனை நொடியிற் கொணர்கிறேன்," என்றிசைத்து அகன்றனள்.

அவ்வாறு அகன்ற ஆருயிர்த்தோழி அன்றிரவே துவரை யடைந்தனள். ஆங்கவள் தேவ மகிமையால் அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிக் கொண்டு உஷாதேவி பள்ளியறையிற் சேர்த்தனள். அதுகண்ட வாணன்புத்திரி பேருவகை எய்தி னள்.

அப்போது அநிருத்தன் நித்திரை நீங்கி விழித்தெழுந்து பார்த்தான். மயிலையொத்த உஷை யின் வதனம் நோக்கி, ' வானின்றும் மதி இவ்

வறைக்குட் போந்ததோ,' எனச் சந்தேகித்தான். சந்திரனுக்குக் களங்க மிருப்பதாலும் முறுவல் இன்மையாலும் திங்களன்று எனத் தேர்ந்து அவளை வியந்து மகிழ்வு பூத்தான். அப்போது உஷைசற்று நாணம் நீங்கப் பெற்று அவனிடம் தான் கனுக்கண்டதுமுதல் அவன் அவண் வந்து சேர்ந்ததுவரை விளக்கமாக உரைத்தனள். அது கேட்டு அநிருத்தன் மகிழ்ந்தான். அன்று முதல் அவ்விருவரும் காதலனுங் காதலியுமாக இருந்து கூடிக் குலவிவந்தனர்.

ஆண்வாடை அடிக்கக் கூடாதென்று அவுணர் வேந்தன் சில அசுரப்பெண்களை உஷை வசித்து வந்த மாளிகையைக் காவல் செய்துவர நியமித்தான். அவ்வாறு அவர்களும் ஆடவன் எவனும் அவள் அந்தப்புரம் அணுகாவண்ணங் காவல் புரிந்து வந்தனர். ஆனால் அவ்வசுரப்பெண்கள் அநிருத்தன் அங்கிருப்பதை யறியாமற்போயினும் உஷையின் தேகத்தி லுண்டான சில மாறுதல்களைக்கண்டு அவளைச் சந்தேகித்தனர். உடனே அவர்கள் அசுரர் கோனிடம் தாம் கண்ட கெட்ட குறிகளை யுணர்த்தினர்.

அது கேட்டதும் மாவலி மைந்தன் சீற்றம் மிகுந்து கன்னிமாடஞ் சார்ந்தான். அவ்வேளையில் அநிருத்தனும் உஷையும் கவருடிக்கொண்டிருந்ததைக் கண்டான்; கண்கள் சிவந்தான்;

தனது வீரரைப்பார்த்து அநிருத்தனைச் சிறை செய்யுமாறு உத்திரவிட்டனன்.

உடனே அசுர வீரர் ஆயுதங் கொண்டு அநிருத்தனை வளைந்துகொண்டனர். அது கண்ட மன்மதன்மைந்தன் அவ்வறையில் ஒரு மூலையிலிருந்த ஓர் இருப்புலக்கையை எடுத்துக் கொண்டு அவுணரை எதிர்த்து அவர்கள் அனைவரையும் ஒரு நொடியில் எமனுலகுக்கனுப்பினன். அப்போது உஷை தன் நாதன் வெற்றி பெற்றதைக் குறித்து மன முவந்தாள்.

அசுரர் யாவரும் அழிவுற்றதைக் கண்ட பாணன் வெகுளிமிகுந்து நாகாஸ்திரத்தைப் பிரயோகித்து அநிருத்தனைச்சிறைசெய்தான். அவன் சிறைவாசஞ்செய்ய நேர்ந்ததைக் குறித்து உஷை சொல்லவொண்ணுத் துக்கங்கொண்டாள். அவனைப் பிரிந்து தனியே இருக்கமாட்டாது கவலை மிகுந்து அகங்குழைந்தாள். இவ்வாறு நான்கு திங்கள் சென்றன.

நிற்க, துவாரகாபுரியில் அநிருத்தனைக் காமன் மதன் முதலான யாதவர் வருந்தினர். அக்காலை யாழ்முனிவன் அங்குப் போந்து ப்ரத்யும்நனிடம் அநிருத்தன் உஷை அந்தப்புரம் சேர்ந்து பாணுசுரனுல் சிறை செய்யப்பட்ட வரலாற்றை விவரமாக விளம்பினன்.

அதுகேட்ட யானை இடர் தீர்த்தருளிய எந்

தல் தமது பன்னிரண்டு அக்ஷௌஹிணி யாதவ வீரருடன் பாணாசுரனை வதைக்கப் புறப்பட்டருளி னர். மாரிக்காலத்தில் இருகரைகளிலும் தவழ்ந்து வேகமாக வரும் வெள்ளத்தைப்போல யாதவசேனை சோணிதபுரம் சென்றடைந்தது. உடனே யாதவ வீரர் போர் தொடங்குவதற்கு அறி குறியாகச் சங்கநாதஞ் செய்தனர்.

யாதவ வீரர் செய்த போர்முழக்கங் கேட்ட பாணன் தனது பன்னிரண்டு அக்ஷௌஹிணி சேனைசகிதம் யாதவரை எதிர்க்க வந்தான். அவ னுக்குத் துணையாக வீரத்திற் சிறந்த கூபகன்னன் கும்பாண்டன் ஆகியவர் சென்றனர். மற்றும் சிவபெருமான், சுப்பிரமணியமூர்த்தி, விநாயகக் கடவுள் முதலானோரும் அவ்வசுரனுக்கு உதவி புரியப் போர்க்களம் போந்தனர்.

யுத்தம் ஆரம்பமாயிற்று. இருதிறத்தினரும் வெகு வீராவேசத்துடன் போர்புரிந்தனர். தானவ வீரரில் அநேகர் அழிவுற்றனர்; பலர் குற்றுயிரா யினர்; குறையுடல்களானோர் கணக்கிலடங்கா தோர். எங்கு பார்க்கினும் குருதி ஆறாக ஓடியது; அதில் எண்ணிலாப் பிணங்கள் மரக்கட்டைகளைப் போல மிதந்து சென்றன; தலையில்லாத முண் டங்கள் பல களத்தில் நின்று கூத்தாடின. புள் ளினம் அதைப்புண்ண ஆகாயத்தில் வட்டமிட் டுத் திரியலயின.

அக்காலை மன்மதனும் முருகவேளும் ஒரு பக்கத்தில் ஒருவரோடொருவர் எதிர்த்துச்சண்டை செய்தனர். மற்றொரு சார் சாத்தகியும் வாணனும் பொருதனர். மற்றொருபுடை கிருஷ்ணபரமாத்மாவும் சிவபெருமானும் அமர் புரிந்தனர். இவ்விருவர் செய்யும் போரைக்காண இமையவர் ஆகாயத்திற் கூடினர்.

முதலில் சிவபெருமான் வாயுவஸ்திரத்தை விடுத்தனன். அதனைப் பைந்துழாய் அண்ணல் வேறொருகணைதொடுத்து அழித்தருளினன். மீண்டும் நீறணிந்த நிமலன் அக்கினிப்படை, பசுபதாஸ்திரம் முதலிய அஸ்திரங்களைப் பிரயோகித்தனன். அதற்கு முகில்வண்ணன் வருணப்படை, நாராயணாஸ்திரம் முதலிய பகழிகளை யேவி அவற்றின் வல்லமையை மாய்த்தருளினன்.

அப்போது கிருஷ்ணவள்ளலின் பராக்கிரமத்தைக்கண்ணுற்ற விநாயக மூர்த்தியும் சுப்பிமணியக் கடவுளும் முன்னை நிகழ்ச்சியை எண்ணிப் போர்க்களம் விட்டோடினர். பாணனுக்கு உதவி புரிய வந்த கும்பாண்டனும் கூபகன்னனும் வலிமை இழந்து மடிந்தனர். பாணனைத் தவி ஏனைய அசுர வீரர் அனைவரும் யாதவ வீரர் கணைகளுக்கு இரையாயினர்.

இதுவரை சாத்தகி முதலான யாதவவீரரை எதிர்த்துப் போராடிவந்த பாணாசுரன் அவர்

களைவிட்டு நாகணையில் துயிலும் நாராயணனை எதிர்க்க வந்தான். அவ்வேளையில் அவன் அரண்மனையின் உச்சியில் விளங்கிக்கொண்டிருந்த துவஜம் அறுபட்டுக் கீழே விழுந்தது. அது கண்ட அரக்கன் பரமசிவன் மொழியை நினைவிற் கொணர்ந்தான். ஆயினும் அவன் சோர்வு கொள்ளாமல் எண்ணிலாப் பாணங்களை எம்பெருமான் மீது பிரயோகித்தான். அவற்றை நீலநிறக் கடவுள் எதிர்கணை தொடுத்து அழித்தருளினன். இன்னணம் அசுரன் அஸ்திரங்கள் எய்யவும், அவற்றைக் கொண்டல்வண்ணன் மாறுகணை தொடுத்து அழித்து வந்தருளினன். கடைசியாகக் கண்ணபிரான் சினந்து தமது சக்கராயுதத்தை விடுத்து அவுணன் சிரசையுங் கரங்களையுந் துணித்துக்கொண்டு வந்தருளினன்.

அசுரவீரர் யாவரும் அழிந்து பாணன் தனியாகச் செங்கமலக் கேள்வனை எதிர்த்து யுத்தம் புரிந்துகொண்டிருப்பதை அவன் தாய் அறிந்தனள். உடனே அவ்வரக்கி ஆடையின்றி அமர்க்களம் நண்ணிக் கிருஷ்ணமூர்த்தியை எதிர்க்க வந்தாள். அரக்கி கொண்ட கோலத்தைக் காணச் சகியாமல் அண்ணல் தமது முகத்தைத் திருப்பிக் கொண்டு வாளா இருந்தருளினன்.

இதுசமயம் எதிர்பார்த்த பாணாசுரன் சற்று இளைப்பாற எண்ணித் தன் நகர் நோக்கினன்.

அவன் ஏறிச்செல்ல இரதமின்றிப் புரவியுமின்றி நடந்து சென்றான். அங்ஙனம் செல்லுகையில் பிணங்களின்மீது இடறிவிழுந்தும் இரத்த வெள்ளத்தில் நீந்திக்கொண்டும் போயினான்.

இங்ஙனம் பாணன் போர்க்களம்விட்டுத் தன் நகர்நோக்கிப் போவதைப்பரமசிவன் கண்டனன்; உடனே சீற்றங்கொண்டு தனது சூலாயுதத்தைப் பைந்துளவக் கண்ணியான்மீது ஏவினன். அது மூன்று சென்னி, மூன்று கால்களுடன் உருத்தரித்துச்சென்றது. அதன் மீதுமணிவண்ணன்வைஷ்ணவ ஜ்வரம் என்னும் அஸ்திரத்தை ஏவி யருளினன். சிவபிரானது விருப்பத்தின் வண்ணம் அச் சூலப்படை தோல்வியுற்றதாகக் காட்டி மீண்டது.

பின்பு இளைப்பாறச்சென்ற பாணாசுரன் யுத்தகளம் வந்து சேர்ந்தான். அப்போது அவன் முன்னிலும் பன்மடங்கு வீராவேசத்துடன் செந்தாமரைக் கண்ணனை எதிர்த்துப் போராடினான். ஆயினும் பெருமாள் பலபகழிகளைப் பிரயோகித்து அசுரன் கரங்களை ஒவ்வொன்றாகச் சேதித்தருளினன். கடைசியாக நான்கு கைகளே எஞ்சி யிருந்தன. அவற்றையும் துணிக்கும்போது சிவபெருமான் அங்கு வந்தனன்.

அங்ஙனம் போந்த பரமசிவன் பார் பயந்த பரந்தாமனை நோக்கி "முன்பு இரணியன் புத்திரனை பிரகலாதனை நோக்கி 'இனி நினது வமி

சத்தில் வந்தவரை வதைப்பதில்லை' என வொரு வரம் அளித்திருப்பதால் அவன் குலத்துதித்த இப்பாணனை வதைக்காமல் அருள்புரிய வேண்டுவது கடமை'' என்று கூறியருளினன்.

இம்மொழி செவியுற்ற இறைவன் சினம் தணிந்து சிவபிரானைப்பார்த்து, "நீர் கூறியவாறு யான் முன்னர் பிரகலாதனுக்கு வரம் அருளியது உண்மையே; ஆனால் இவ்வரக்கன் காரணமின்றி அநிருத்தனைச் சிறைசெய்ததால் யாம் இவன் கரங்களைச் சேதித்தனம்; ஆயினும் இவனை யாம் கொல்லப்போவதில்லை''; என்று பகர்ந்து பாணனை நோக்கி, "அசுர, நீ இந்நான்கு புயத்துடன் இவ்வுலகில் நிலவுக,'' என அருளினன்.

அப்போது பாணன் நல்லறிவு வாய்க்கப்பெற்றுத் தனது நான்கு கரங்களால் கமலக் கண்ணனை வணங்கி,'சுவாமி, புல்லறிவு மிகுந்த புலையனினுங் கீழ்பட்ட யான் என்னை எதிர்ப்பாரின்றிச் செருக்குற்றிருந்தேன்; இன்று யான் அது அடங்கப் பெற்றேன்,'' என்று கூறிப் பரவினன்.

பின்பு மாதவன், மாதுபங்கன், முதலான யாவரும் யுத்தகளம் விட்டுச் சோணிதபுரம் வந்து அடைந்தனர். ஆங்கு அடலுறு அநிருத்தனுக்கும் உஷைக்கும் திருமணம் இனிது நடைபெற்றது. பாணாசுரன் தன் உளமகிழ்ந்து உஷையை அநிருத்தனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தான்.

கிருஷ்ணமூர்த்தி, பலராமர் முதலான பெரியோர் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தம் அகமகிழ்ந்தனர். அப்பால் பாணன் தேர், இரதம், புரவி இன்னும் பல சீர்களை அநிருத்தனுக்கு நல்கித் தன் மன மகிழ்ந்தான்.

சந்திரமதி பரிணயம்.

பரதவள்ளல் அரசுபுரிந்த இவ்விந்தியா தேசத்திற்குப் பரதகண்டம் என்று பெயர். இதன் வடபாகத்தில் சரயுநதி பாயப்பெற்ற நாடு ஒன்றுளது. அது கோசலம் எனப்படும். அந்நாடு நீர் நிலவளங்கள் மிகுந்து செழிப்புற்றிருந்தது. மழைவளங் குன்றினும் ஆகாய கங்கையின் ஒரு பிரிவான சரயுநதி என்றும் நீர் நிரம்பக் கொண்டு அந்நாட்டிற் பாய்ந்துவந்தது. அதனால் அந்நாடு வளங்குன்றாமல் செழித்தோங்கியது.

இத்தகைய நாட்டிற்கு அயோத்தி எனும் நகர் தலைநகராக அமைந்து விளங்கியது. ஆங்கு மாட மாளிகைகளுங் கூட கோபுரங்களும் கண்டவர் கண்ணைக் கவரத்தக்க மிக்க அழகாக அமையப் பெற்று விளங்கின. அந்நகரைச் சுற்றிய வெளிப்புறத்தே நன்செய் நிலங்கள் மிகுந்திருந்தன. அவண் என்றும் பச்சை நிறங்கொண்டு கதிர்கள் இலகின. மற்றும் அப்பட்டணத்தில் குளங்களும், வாவிகளும், ஏரிகளும் எக்காலத்தும் நிரம்ப நீர்கொண்டு இருந்தன.

இவ்வளவு மேன்மை வாய்ந்த கோசல நாட்டிற்கு அரிச்சந்திரன் என்போன் அதிபதியாகத்

திகழ்ந்தனன். ஹரி சந்த்ர என்னும் பதங்களுக்குப் பிரதாபத்தாற் சூரியனையும் கீர்த்தியால் சந்திரனையும் நிகர்த்தவன் என்பது பொருள் ஆகும். மற்றும் ஹரி என்பதற்கு விஷ்ணு என்ற பொருள் கொண்டால், அவரைப் போலக் காத்தற் றொழிலையும் மகிழ்விக்குந் தொழிலையுங் கொண்டவன் என்றுங் கூறலாம். ஆகவே கோசல நாட்டதிபனும் தன் பெயருக்கேற்பத் தன்னுயிரே போல மன்னுயிரை ஓம்புந் தன்மையைக் கொண்டான்; குடிகளுக்குத் துன்பம் உற்றால் தனக்குற்றதைப் போலெண்ணி வந்தான்; நீதி நெறி வழுவாதவன்; விழுமியோரை விரும்பி உபசரிக்கும் உத்தமன்; சத்தியவான்; வறியவர்களுக்கு வேண்டியன வழங்குந் தன்மையான்.

இத்தகை நற்குணங்கள் செறிந்த அரிச்சந்திரன் ஒருநாள் தனது அரியாதனத்தில் அமர்ந்திருந்தனன். வழக்கம்போல அரச காரியங்களைப் பார்த்துவிட்டு அமைச்சருடன் வார்த்தையாடிக்கொண் டிருந்தனன். அப்போது வாயிற் காப்போர் அங்கு வந்து சில தவச் சிரேஷ்டர் அரண்மனைநோக்கி வருவதாக அவனிடம் கூறினர்.

அதுகேட்ட அரசன் அடங்கா மகிழ்ச்சி கொண்டு ஆதனம் விட்டு அம்முனிவரை எதிர் சென்று அழைத்துத் தக்க ஆசனத்தில் அமர்த்தி

னன். இருடியரும் அங்ஙனமே எழுந்தருளி அவனை ஆசீர்வதித்தனர். பின்பவன் தன் பொன் முடி முனிவர் பொன்னடி பொருந்த வணங்கி, "அருந்தவமுனிவீர், நீவிர் இவண் எய்தியது என்குலஞ் செய்தகவமோ? அன்றி யான் முன் பிறப்பில புரிந்த தவமோ? இந் நிலஞ்செய்த தவமோ? யாதென்று அறியேன்; நீங்கள் எந்தெந்தப் புண்ணிய நதிகளில் நீராடி வருகின்றீர்? எந்தெந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களைக் கண்டு தரிசித்தீர்? அவற்றின் மகிமையைக் கூறியருள்க," என்று வேண்டினன்.

இவ்வாறு காவலன் வேண்டவும் தவசியர் அவனைப்பார்த்து, "மன்னர் மன்ன, நாங்கள் கங்கை, யமுனை முதலிய சிரேஷ்டம் பொருந்திய நதிகளில் நீராடிப் பல க்ஷேத்திரங்களைத் தரிசித்து முடிவில் கண்டகிநதி பாயும் கன்னோசிநாடு அடைந்தனம்; அந்நாடு சகல வளங்களும் மிகுந்துள்ளது. பின்பு அதன் தலைநகரான கன்னபாபுரி வந்து சேர்ந்தனம்; அந்நாட்டை மதிதயன் என்பவன் அரசுபுரிந்து வருகின்றனன்; அவன் மகா விவேகி; விருந்தினரை விருப்பமுடன் உபசரிக்கும் தன்மையன்; தயாள மனத்தினன்; நீதி வழுவாதவன்."

"இத்தகைய வேந்தல் புத்திரப் பேறின்றிச் சிவபிரானைத் தியானித்துத் தவங்கிடந்து வந்தான்.

சில காலத்திற்குப் பின்பு சிவபெருமான் அவன் முன்பு தோன்றி, 'மதிதய, நீ மக்கட்பேறு அடையாததைக் குறித்து வருந்தி அகம் குழையவேண்டாம்; உனக்கு ஓரழகிய பெண்குழந்தை பிறக்கும்; அக்குழவியால் நீ மிகுந்த கீர்த்திபெற்று விளங்குவாய்,' என்று கூறி மறைந்தருளினர்."

"சிவபெருமான் மொழிந்தவாறு சில தினங்களுக்கு அப்பால் மதிதயன் ஒரு பெண்குழந்தையைப் பெற்றுக்கொண்டான்; அவள் பெயர் சந்திரமதி; மிகுந்த அழகு பொருந்தியவள்; பெண்களுக்கு உரிய நால்வகைக் குணங்களையுங் கொண்டவள்; கற்பில் அருந்ததியை ஒத்தவள்."

"அம் மங்கையை மணமுடித்துக்கொள்ள அரசர்பலர் மதிதயனை நண்ணித் தமக்குக் கொடுக்குமாறு வேண்டிக்கொண்டனர். ஆனால் அவன் அவர்களின் வேண்டுகோளை அங்கீகரியா தொழிந்தனன். சந்திரமதியை மணக்க எண்ணி உவகையுடன் வந்த மன்னவர் யாவரும் களிப்பற்று வருத்தம் மிகுந்து தம் நகர் நாடினர். அயோத்தி மன்ன, அவ்வரசர்களைக் காட்டிலும் நீ பலவிதத்திலும் மேலானவன் என்று நாங்கள் தெரிந்துகொண்டோம்; அவளுக்கு ஏற்ற நாயகன் நீயே; உனக்கு ஏற்ற நாயகி அவளே, ஆதலால் நீயவளை மணந்து சுகமுடன் வாழ்வாயாக" என்று கூறி முடித்தனர்.

அதுகேட்ட வள்ளல் சந்திரமதியின் மீது மிகுந்த மையலுற்று அவளை மணக்க ஆவல் கொண்டான். உடனே அவன் முனிவர்களைப் பார்த்துச் சிரேஷ்டரே, எனக்கோர் உதவி புரியுமாறு யான் உங்களை வேண்டுகிறேன். நீவிர் கூறியதிலிருந்து சந்திரமதி எழிலோடு நற்குணங்களும் வாய்க்கப்பெற்ற நங்கை என்று அறிந்தேன்; அதனால் நான் அவளை எனது மனைவியாக ஏற்றுக்கொள்ள இசைகின்றேன். நீவிர் இப்பொழுது மீண்டும் கன்னமாபுரி யணுகி மதிதயனை நோக்கி எனக்கு அவன் மகளை வதுவை செய்து கொடுக்கும்படி கேட்டுப் பதில் தெரிவித்தருள வேண்டும்; இவ்வுதவி யொன்றையே யான் வேண்டுவது," என்று மொழிந்தனன்.

இறைவன் மொழியை இருடியர் இன்பமுடன் ஏற்றுக் கன்னமாபுரி சென்றனர். மறுபடியும் முனிவர் தன்நகர் வந்தடைந்ததைக் கண்ட மதிதயன் மகிழ்வுகொண்டு அவர்களை வரவேற்றான். பின்பவன் அவர்களைப் பணிந்து, "முனிவீர், நீவிர் மீண்டும் இவ்வளவு சீக்கிரத்தில் இங்கு எழுந்தருள யான் என்ன பாக்கியஞ் செய்தேனோ! ஆயினும் நீங்கள் ஏதாவது ஒரு காரணம்பற்றி வந்திருத்தல் வேண்டும்; அதனைக் கிருபைகூர்ந்து கூறியருள்க." என்று சொன்னான்.

அதற்கு முனிவர்கள் அவனைப் பார்த்து,

"கன்னமாபுரிக் காவல, நாங்கள் கண்டகி நதியில் நீராடி உனது நகரின் வனப்பையும் அதிசயங்களையுங் கண்டு களித்துச் சென்றோம் அல்லவா? பின்னர் நாங்கள் பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு அயோத்தி நகர் வந்தடைந்தோம்; அந் நகர்க்கு இறைவனான அரிச்சந்திரன் என்போன் எங்களை அன்புடன் உபசரித்து நல்வரவு கூறினன்; அவன் மற்ற வரசர்களைக் காட்டிலும் வீரத்திலும், புகழிலும், கொடையிலும் சிறந்தவன்; நீ இதுவரை உன் மகட்குத் தகுதியான கணவன் அமையாது வருந்துவதை யாம் உணர்ந்தோம்; நாங்கள் இதுவரை கண்ட அரசர்களுள் அரிச்சந்திரன் ஒருவனே மேலானவன்; அவளை அவனுக்கே நீ மணஞ்செய்து கொடுத்திடு," என்றனர்.

அதுகேட்ட மதிதயன் அவர்களைப் பார்த்து, "நீவிர் கூறியவை யாவும் உண்மையே; யானும் அரிச்சந்திர வள்ளலை அறிவேன்; அவர்க்குச் சந்திரமதியைக் கொடுக்க எனக்குப் பூரண சம்மதமே; ஆனால் ஒன்றுளது," என்று சந்திரமதியைப் பற்றிய தேவ இரகசியத்தைக் கூறி, ஆயினும் இன்றைக்கு ஏழாம் நாள் நடக்கப் போகும் சுயம்வரத்திற்கு அவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்," என்று சொன்னான். முனிவர்களும் அங்ஙனமே செய்வதாகக் கூறி அயோத்தி நோக்கினர்.

பின்பு மதிதயன் சில ஒற்றரை விளித்துச் 'சந்திரமதிக்கு இன்றைக்கு ஏழாம் நாளன்று சுயம்வரம் நடக்கப்போவதாக எங்கும் முரசு அறைக' என்று கட்டளையிட்டனன். முரசொலி கேட்ட மன்னவர் அனைவரும் கன்னமாபுரிவந்து சேர்ந்தனர். அவர்களை மதிதயன் உபசரித்துத் தக்க விடுதிகள் அமைத்துக் கொடுத்தனன்.

இஃது இவ்வாறாக, அயோத்தி சென்ற முனிவர் அரிச்சந்திரனைப் பார்த்துச் சந்திரமதிக்கு நடக்கப்போகும் சுயம்வரத்திற்குஅவனை வருமாறு மதிதயன் வேண்டிக் கொண்டதாகப் புகன்றனர் உடனே அரிச்சந்திரன் மனமகிழ்ந்து அம் முனிவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு தனது திரண்ட சேனைகளுடன் கன்னமாபுரி நோக்கிப் புறப்பட்டனன். எண்ணிலா மக்கள் புடை சூழ்ந்துவர அவன் ஓரழகிய தேர் ஏறி அமர்ந்தனன்.

பொழுது அஸ்தமிக்கும் வேளையில் அரிச்சந்திரன் முதலானோர் கோமதி ஆற்றங்கரையைக் குறுகினர். அங்குக்கூடாரங்கள் போட்டுக்கொண்டு அவர்கள் அன்றிரவைக் கழித்தனர். மறுநாட் காலையில் அவர்கள் புனல் விளையாட்டுப் புரிந்து களிப்பெய்தினர், அவ்வாற்றங்கரையில் உள்ள சோலைகளுக்குச் சென்று அவற்றின் வனப்பைக் கண்டு உவகை பூத்தனர் ; இவ்வாறு அன்றைத்

தினத்தையும் அங்கேயே தங்கியிருந்து கழித்து மறுநாள் அவ்விடம் விட்டுச் சென்றனர்.

அவர்கள் வழியில் குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை ஆகிய நிலங்களைக் கடந்து சென்றனர். அங்ஙனஞ் செல்லுங் காலை இடையில் காளி கோவில் ஒன்று தென்பட்டது. காளிதேவியைத் தரிசித்துவர அரிச்சந்திரன் அங்குப் போயினன். கோயிலின் வாயிலில் கற்றேர், கற்பரி, கற்சிலை முதலியனவற்றைக் கண்டு வியப்புற்ருன். பின்பவன் அம்மையைச் சேவித்துவிட்டு வெளியேவந்தான். அப்போது அவன் முன்கண்ட கல்லால் செய்யப்பட்டிருந்த தேர், குதிரை, சிலை யாவும் பசும்பொன்னுல் செய்யப்பட்டுப் பொலிவுற்றதைக் கண்டு ஆச்சரியத்தால் திகைத்து நின்ருன்.

அக்காலை காளிதேவி பிரசன்னமாகி அவனைப் பார்த்து, "அரசே, இவை வருணபகவானுக்குச் சொந்தமானவை; இவர் ஒரு சமயம் இவற்றைக் கல்லுருவாக மாற்றி எவன் இவற்றைப் பொன்னிறங் கொண்டு விளங்குவதாகக் காண்கிருரோ, அவர்பால் அளித்திடுக' என என்னிடங் கூறிப்போயினர்; இதுவரை அநேக மன்னரும் மற்றவரும் இங்கு வந்தனர்; ஒருவர் விழிக்காவது இவை பொன்னிறங் கொண்டு தோன்றவில்லை; நீ ஒருவனே அங்ஙனங் கண்டனை; ஆத

லால் நீ இவற்றைக் கொள்க," என அருளி மறைந்தனள்.

காளியம்மை கழறியவாறு காவலன் அவற்றை ஏற்றுக்கொண்டு பிரயாணமானன். சின்னுளில் அவனும் அவனைத் தொடர்ந்து வந்தோர் அனைவரும் கன்னமாபுரி வந்தணுகினர். அவர்களை மதிதயன் அன்போடு முகமன் கூறி வரவேற்ருன். அரிச்சந்திரன் தங்கியிருக்க அரண்மனையில் ஒரு பாகத்தைக் கொடுத்தான்; சேனுவீரர் முதலானேர்களுக்கு வேறு இடங்கள் கொடுத்தான்.

ஆறுநாள் கழிந்து சுயம்வர நாள் வந்தது. அன்றைத்தினம் சபாமண்டபத்தில் அரசர் யாவரும் தத்தம் அந்தஸ்துக் கேற்ற ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். அரிச்சந்திரன் தனக்கென்று இடப்பட்டிருந்த எழில் மிகுந்த ஒரு பொற்பீடத்தில் வீற்றிருந்தனன். எல்லோரும்மிகுந்த சந்தோஷத்துடன் இருந்தனர். ஆனல் மதிதயன் மட்டிலும் ஒருவிதக் கவலையுடன் இருந்தான். அவன் தனது மகளை அரிச்சந்திரன் மனைவியாகக் கொள்ளும் பாக்கியத்தைப் பெறுகிருனே மாட்டானே என்று வருத்தப்பட்டான்.

அப்போது சந்திரமதி தோழியர் மருங்கில் வரச்,சபாமண்டபம் வந்துசேர்ந்தாள். அவள் அழகுக்கு அழகுசெய்தாற்போலப் பலவித ஆடை ஆப

ரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தனள்; சந்தி ரனே வானின்று இழிந்து அங்குப் போந்ததென விளங்கினள். அரசர்கள் எல்லோரும் தமது நாட்டத்தை யவள்மீது செலுத்திப் பதுமை என இருந்தனர்.

பின்பு தோழியர் அங்கு வீற்றிருந்த ஒவ்வொரு மன்னவர் பெயர், நாடு, குணம் முதலிய்வற்றைக் கூறிக்கொண்டு வந்தனர். சந்திரமதி எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டு அவர்களை விலக்கி அரிச்சந்திரனை யணுகினள். சேடியர் அவனுடைய பெயரையும், வளநாட்டையும், கீர்த்தியையுங் கூறினர். அதுகேட்ட சந்திரமதி மகிழ்ந்து தனது சிரசைச் சற்று உயர்த்தி அவனைப்பார்த்து விட்டு மீண்டுந் தலைகவிழ்ந்து கொண்டனள்.

அவ்வேளையில் அயோத்தி மன்னவன் சந்திரமதி கண்டத்தில் ஒரு மங்கல நாண் விளங்குவதைக் கண்டான். 'ஆ, ஆ, இவளுக்கு ஏற்கனவே மணமாகிவிட்டதே. நம்மை ஏய்க்கவே மதிதயன் வரவழைத்தனன்போலும், என்றுதனக்குட் கூறிச் சீற்றங்கொண்டு மதிதயனைப் பார்த்து, "அரசரே, ஒருவன் ஏற்கனவே மணமுடித்துக்கொண்ட மங்கையை இன்னொருவன் மணக்கலாகுமோ? இது நீதியோ? அன்றிக் கேலி செய்யவோ எங்களை இங்குவரவழைத்தீர்?" என்று படபடப்புடன் பகர்ந்தனன்.

அதுகேட்ட மதிதயன் அடங்கா மகிழ்ச்சி கொண்டு, 'இன்றே யான் பாக்கியவான் ஆனேன்' எனப் பன்முறை தனக்குட் சொல்லிக் களிப்புற்றனன். பின்பவன் ஏனைய அரசர்களைப் பார்த்து "வேந்தர்காள்! சந்திரமதி கழுத்தில் மங்கல நாண் பொலிவுறுவதாக அரிச்சந்திர வள்ளல் கூறுகிறார்; அவர் கூறியது உண்மையா? பொய்ம்மையா? நீவிர் சொல்லுக," என்றனன். அதற்கவர்கள், "அரிச்சந்திரன் பொய்யே புகன்றான்; மங்கல நாணை நாங்கள் காணவில்லை," என விடையிறுத்தனர்.

அப்போது மதிதயன் அவர்களைப் பார்த்து, "மன்னர்காள், அரிச்சந்திர மன்னவர் உண்மையையே புகன்றார்; இதில் ஒரு தேவ இரகசியம் உளது; அதனைக் கூறுகிறேன், கேளுங்கள். சந்திரமதி மங்கல நாணுடனே பிறந்தனள்; அப்பொழுது, 'இவள் கழுத்திலிருக்கும் நாண் கண்ணுடி நிழலில்தவிர மற்ற எவர் கண்ணுக்கும் புலப்படாது; அதனை எவனொருவன் காண்கிறானோ, அவனே அவளுக்கு மணாளனாவான், என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அதன்படி அந்நாண் உங்கள் விழிக்குத் தென்படவில்லை; அரிச்சந்திரரே கண்டார்; ஆதலால் சந்திரமதி அவருக்கே உரியவள் ஆயினள்," என்று நவின்றனன்.

உடனே சந்திரமதி பேருவகை பூத்து, 'இம்

மாலை அரிச்சந்திரன் கழுத்தில் விழக் கடவது,' என்று தனக்குட் சாற்றித் தன் கரத்தில் இருந்த ஆரத்தை அந்தரத்தில் வீசி எறிந்தனள். அது நேராக அவன் கழுத்தைச் சேர்ந்து இலகியது. ஆயினும் அவன் அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ளச் சந்தேகித்தான், அப்பொழுது அசரீரி 'அரிச்சந்திர, மதிதயன் கூறியது உண்மையே; சந்திரமதி மகா உத்தமி; அவள் பிறந்த காலையில் இந்நாண் அவள் கழுத்தில் இருந்தது; நீ அவளைப்பற்றிச் சந்தேகிக்க வேண்டாம்,' என்று மொழிந்தது. அதன்பின்பே அவன் தன் மனப் பூர்வமாக அவளை மணக்க இசைந்தான்.

அப்பால் முறைப்படி விவாகச் சடங்கு நடை பெறலாயிற்று. வேதியர் மந்திரம் ஓதினர். பல வாத்தியங்கள் கோஷித்தன. இவற்றிற் கிடையில் மதிதயன் சந்திரமதியை அரிச்சந்திரனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தனன். விவாகமண்டபத்தில் கூடியிருந்தோர் அனைவரும் ஆனந்தம் மிகுந்தனர். அந்தணர், எளியமக்கள் முதலானோர்களுக்கு அன்னம், வஸ்திரம், பொன் முதலியன நிரம்ப வழங்கப்பட்டன. அரிச்சந்திரன் மண விஷயமாகத் தூது சென்ற முனிவர்கள் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தம் உளம் மகிழ்ந்தனர்.

சுபம்.

அரும்பத விளக்கம்.

அ

அக்ஷௌஹிணி = ஒரு பெருஞ்சேனை.

அடல் = பெருமை

அமரர்கோன் } = இந்திரன்
அமரேசன் }

அரியாதனம் = சிம்மாசனம்.

ஆ

ஆனந்த வாரிதி = சந்தோஷக் கடல்.

ஆலம் = விஷம்.

இ

இரப்பவர் = பிச்சை எடுப்பவர்.

உ

உழலுகின்றோம் = வருந்துகின்றோம்.

எ

எஞ்சி = மீதி

ஏ

ஏறு = சிங்கம்.

ஐ

ஐங்கணைக்கிழவன் = ஐந்து மலர் அம்புகளையுடைய மன்மதன். அவை, முல்லை, அசோகம், நீரோற்பலம், செண்பகம், அல்லி என்பன.

ஒ

ஒண்டொடி = ஒளிபொருந்தியவளையல்களை அணிந்தவள்.

க

கஞ்சாதனத்தோன் = தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவன்.

கடு = விஷம்.

கணிதமக்கள் = சாஸ்திரத்தில் வல்லவர்கள்.

காரிகை = பெண்.

கவறுடல் = சொக்கட்டானாட்டம் ஆடுதல்.

கு

குருதி = இரத்தம்.

குழூ = கூட்டம்.

கோ

கொண்டல் வண்ணன் = மேகநிறம் வாய்ந்த மேனியான்.

சா

சாந்திராயண விரதம் = கிருஷ்ண பக்ஷத்தில் ஆகாரத்தை ஒவ்வொரு நாளுங் குறைத்துக்கொண்டும், சுக்கில பக்ஷத்தில் அதிகப்படுத்திக்கொண்டும் உண்ணுவதாம்.

சு

சுதன் = புத்திரன்.

சுரர் = தேவர்கள்.

செ

சென்னி = தலை

செறிந்த = நெருங்கிய

த

தன்மையன் = குணத்தோன்.

தயங்கும் = விளங்கும்.

ந

நவில் = சொல்.

நல்கினன் = கொடுத்தான்.

பு

புரவி = குதிரை.

புள்ளினம் = பறவைக் கூட்டம்.

பூ

பூதலம் = பூமி

பொ

பொருதனர் = சண்டை செய்தனர்.

போ

போதகம் = யானை.

போந்து = வந்து.

ம

மக்கட்பேறு = புத்திரபாக்கியம்.

மகபதி = இந்திரன்.

மன்றல் = விவாகம்.

மா

மாது பங்கன் = பார்வதி தேவியை இடது பாகத்திற் கொண்ட சிவபிரான்.

மை

மையல் = ஆசை.

மு

முனிதல் = கோபித்தல்.

முகமன் = உபசாரவார்த்தை.

முறுவல் = புன்சிரிப்பு.

யா

யாழ் = வீணை.

224013

வறியவர் = எளியவர்.

வா

வாவி = கிணறு.

வாளா = சும்மா, வறிதே.

வி

விழுமியோர் = பெரியோர்.

பொருணையந்தேர் வாக்கினன் பூசுரனும் அப்பன்
பரிணயந்தேர்ந் தாண்ட படியே—விருணலியம்
பஞ்சவனத் தத்தையொழி பார்வதி யாதியாம்
பஞ்சவனத் தத்தைமொழி! பாக்கு.

ஸ்ரீ திருமலைசாமி அய்யங்கார்,
தமிழ் வித்துவான், நீலிதநல்லூர்.